19th May 1954]

Closure of factories in 1954.

* 942 Q.—Sri M. KALYANASUNDRAM: Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(a) the number of factories that were closed during the first quarter of 1954; and

(b) the total number of workers thrown out of employment due to the above closure?

The Hon. Sri M. BHAKTAVATSALAM:—" (a) Thirty-five factories were closed during the 1st quarter of 1954.

" (b) Four thousand seven hundred and seventy-four workers were affected by the closures."

Sri M. KALYANASUNDRAM:—" இந்த தொழிற்சாலைகளை மீண்டும் திறப்பதற்கு சர்க்கார் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது ? "

The Hon. Sri M. BHAKTAVATSALAM:—" Sir, sixteen factories were closed due to financial difficulties, loss in business, slump in trade. Eleven factories were closed permanently. In all 4,774 workers were involved in the closure. Of them, only 71 have been provided with alternative employment; the wages of 62 workers have been adjusted and in the case of certain other workers who are affected, action is being taken under the Industrial Tribunal Award. I do not have any information with me regarding the possibilities of reopening these factories. In the case of Kothandaram Spinning Mills, Madurai, 424 workers are involved and the Special Tribunal has ordered payment of compensation to them. In the Kolliparam Spinning Mill. 1,148 workers were involved when the mill was closed for ten days for Boiler inspection. They have been made eligible only for leave with wages."

Sri K. P. GOPALAN:—" Sir, regarding the number of factories closed, I am of opinion that there are more factories closed than is mentioned by the Hon. Minister for Labour. In view of the fact that unemployment is very acute in our State, will the Government be pleased to take steps to issue an Ordinance preventing the factory owners from closing their factories without the sanction of the Government? "

The Hon. Sri M. BHAKTAVATSALAM:—" Sir, if certain factories are closed due to financial difficulties, loss of business etc., I do not think it will serve any useful purpose if an Ordinance is issued. If the hon. Member has got further particulars about the closure of more factories, I would like him to give me the particulars so that I may look into the matter."

Sri M. NARAYANA KURUP:—" Sir, when factories are closed for financial reasons, is it not a fact that the Government simply accept the statement of the managements without conducting any independent enquiry as to the soundness or otherwise of the claim put forward by them? "

[19th May 1954

THE HON. SRI M. BHAKTAVATSALAM :—" Sir, the hon. Member's presumption is totally wrong."

SRI M. JAGANNATHAN :—" May I know whether any factories were closed either on account of lock-outs or strikes? "

THE HON. SRI M. BHAKTAVATSALAM :—" I would like to have notice, Sir."

SRI K. P. GOPALAN :—" May I know whether the Government are aware that so many factories are closed in order to defeat the purpose of the Labour Disputes Act and the various other Acts passed by the Government and if so, what steps the Government are going to take to protect the workers? "

THE HON. SRI M. BHAKTAVATSALAM :—" Sir, wherever factories are closed in order to defeat the very purpose of the benefits that the workers can get under the Industrial Disputes Act, Government have been taking appropriate action."

SRI N. K. PALANISAMI :—" பாக்டரிகள் மூடுவதற்குமுன்பு அதிலே எவ்வளவு லாபம் வந்திருக்கிறது என்பதையும், லாபத்தில் ஏதாவது குறைந்திருக்கிறதா, ஏன் மூடப்படுகின்றது என்பதையும் சர்க்கார் விசாரணை செய்த பின்பு, அவைகள் மூடப்படுவதற்கு உத்தரவு போடுவார்களா ? "

MR. SPEAKER :—" இந்தக் கேள்வியை, குரூப் அவர்கள் முன்பே கேட்டிருக்கிறுர். நீங்கள் அதை இப்பொழுது தமிழில் கேட்கிறீர்கள்."

THE HON. SRI M. BHAKTAVATSALAM :—" பாக்டரி மூடப்படுவதற்கு முன்பு அரசாங்கம் விசாரணை செய்து உத்தரவு போட்டபிறகுதான் மூடப்படவேண்டுமென்று ஏற்பாடு செய்வது கொஞ்சம் கஷ்டமாக இருக்கும். சில சமயங்களில் அவர்களே வேறு வழிவகை இல்லாமல் மூட வேண்டியிருக்கிறது. ஆனல் முன்பு சொன்னதுபோல் எங்கெங்கே பாக்டரிகள் மூடப்படுகின்றனவோ அங்கெல்லாம் அரசாங்கம் வேண்டிய விசாரணை செய்துகொண்டு வருகின்றனர். இரண்டாவதாக சொல்லப்பட்ட பாக்டரி விசாரணை விஷயத்தைப்பற்றி நான் முன்பு பதில் சொன்னேன். அதற்கு முன்பு அவர்கள் மூடி விட்டார்கள். தகுந்த காரணங்களுடன் மூடி விட்டதாக அரசாங்கத்திற்கு எழுதியிருந்தார்கள். பின்பு லேபர் டிபார்ட்மென்டுக்கு விசாரணை ஏற்பாடு செய்யச் சொன்னேன். அத்துடன் நிற்கவில்லை. இப்போது ஷார்ட் நோட்டீஸ் கேள்விகள் கேட்கப்பட்டிருக்கின்றன. இன்னும் அதற்கு பதில் அளிக்கவில்லை. அதன் மத்தியில் அந்த தொழிலாளிகள் சத்தியாகிரஹத்தை நிறுத்திவிட்டதால் மேனேஜ்மென்டையும் தொழிலாளர்களுடைய பிரதிநிதிகளையும் (Workers' Representative) இங்கு அழைத்துப் பேசுவதாகச் சொன்னேன். அதேமாதிரி நேற்று காலையில் சத்தியாகிரஹத்தை நிறுத்திவிட்டார்கள் என்று சொன்னேன். ஆகவே 24-ம் தேதி நான் அதைப்பற்றி அவர்களுடன் இங்கு கலந்து பேசப்போகின்றேன். அரசாங்கம் இதுபற்றி சும்மா இருக்கவில்லை என்பதை நிரூபிப்பதற்கு இதை திருஷ்டாந்தமாகச் சொல்லுகிறேன்."

SRI S. RAMALINGAM :—" 1954-ம் ஆண்டு முதல் மூன்று மாதங்களில், 16 மில்கள் மூடப்பட்டதால் 4 ஆயிரம் தொழிலாளர்கள் வேலை இழந்திருப்பதாக மந்திரி அவர்கள் தகவல் கொடுத்தார்கள். இதிலிருந்து வேலையில்லாத் திண்டாட்டாம் எவ்வளவு பயங்கரமாகப் பரவிக்கொண்டு வருகிறது என்பதை உணரமுடியும். ஆகையால் இந்த வேலையில்லாத் திண்டாட்டத்தைத் தடுப்பதற்கு, மில்களை மூடாமல் இருப்பதற்காக அவர்களுக்கு ஏதாவது நிதி உதவவேண்டுமென்று சர்க்காரைக் கேட்டால் தாராளமாகக் கொடுப்பதற்கு முன் வருவார்களா ? "

19th May 1954]

THE HON. SRI M. BHAKTAVATSALAM :—" நான் முன்பு பதில் சொன்னேன். தொழிலாளர்களுக்கு வேலையில்லாமல் போகுமே என்பதற்காக கண்ணை மூடிக்கொண்டு நிதி உதவி கொடுத்துவிட முடியாது. அந்த பாக்டரி கடன் கொடுப்பதற்கு பொறுமானமுள்ளதாக இருந்தால்தான் நிதி உதவி கொடுக்கமுடியும்."

SRI M. NARAYANA KURUP :—" The Hon. Minister said that 16 mills have been closed for financial reasons. May I know whether there had been any instance where the Government had disagreed with the managements in respect of this question after their enquiry into the financial position of the mills? "

THE HON. SRI M. BHAKTAVATSALAM :—" I would like to have notice."

SRI M. KALYANASUNDRAM :—" Sir, மூடப்பட்ட தொழிற் 8–20 a.m.
சாலைகளை தொழிலாளிகளே எடுத்து நடத்துவதற்கு முன் வந்தால் அவர்களிடம் அவைகளை ஒப்படைப்பதற்கு சட்டம் இயற்ற சர்க்கார் முன் வருவார்களா ? "

THE HON. SRI M. BHAKTAVATSALAM :—" The Government will examine that question."

SRI T. C. NARAYANAN NAMBIAR :—" The Hon. Minister said that 4,700 workers were unemployed consequent upon the closure of mills. May I inform him that in my constituency alone, that is, Talliparamba, which is a backward area and which is not industrialized, there are 5,000 handloom workers, 400 workers in Pappinisseri and other pen knife works, 1,400 workers in Aaron Mills, Pappinisseri, 200 workers in the Oil Works, Narath and 500 workers in Mamparam Tile Works in South Malabar are unemployed and may I ask him whether the Government will issue an order directing the factories to be opened again and help the managements concerned with finances for the purpose? "

THE HON. SRI M. BHAKTAVATSALAM :—" I have already answered that Government will take all possible steps in order to help the workers to be re-employed."

SRI C. KANDASAMI :—" பொறுமானம் இருந்தால் அந்தத் தொழிலுக்குக் கடன் கொடுக்கமுடியும் என்று கனம் மந்திரி அவர்கள் சொன்னார். இதிலிருந்து என்ன தெரிகிறதென்றால் பல தொழில்கள் போலித்தனமான முறையில், சரியான மூலதனம் போடப்படாமலும், சரியான ஏற்பாடுகள் செய்யப்படாமலும் நடத்தப்படுகின்றன என்று ஏற்படுகிறது. இதன் காரணமாக தொழிலும் பாதிக்கப்படுகிறது ; வேலையில்லாத் திண்டாட்டமும் அதிகரிக்கிறது என்று தெரியவருவதனால், போலித்தனமாகக் கம்பெனிகளை ஆரம்பிக்கக்கூடிய முயற்சிகளைக் கட்டுப்படுத்த சர்க்கார் முன்வருவார்களா ? "

THE HON. SRI M. BHAKTAVATSALAM :—" போலித்தனமாக ஆரம்பிக்கக்கூடிய கம்பெனிகளை சர்க்கார் தங்களுடைய சட்ட வரம்புக்கு உட்பட்டு கட்டுப்படுத்தும். ஆனால், நல்ல வகையில் ஆரம்பித்து, பின்னால் பொருளாதார நிலை திருப்திகரமாக இல்லாத காரணத்தினாலோ அல்லது சரிவர நிர்வகிக்கப்படாததனாலோ அல்லது தொழிலாளிகளினால் ஏற்படும் கஷ்டங்களினாலோ அந்தக் கம்பெனிகள் கெட்டுப்போயிருக்கலாம்."

SRI V. MADANAGOPAL :—" தொழிற்சாலைகள் மூடப்பட்டதன் காரணமாக சம்பந்தப்பட்ட தொழிலாளர்கள் அடங்கிய தூதுகோஷ்டியொன்று கனம் மந்திரி அவர்களைச் சந்தித்துக் கேட்டபோது. " தொழிற்

[19th May 1954

சாலைகளை மூடவேண்டாமென்று தடுப்பதற்கு எங்களிடம் அதிகாரம் இல்லை, என்று கனம் மந்திரி அவர்கள் கூறியது உண்டு. அப்படி யானால், இதுபோன்று மூடப்பட்டிருக்கக்கூடிய தொழிற்சாலைகள் சம்பந்த மாக அவைகள் மூடப்படுவதற்கு முன்னால், சர்க்கார் அதில் தலையிட்டு, தொழிற்சாலைகளை மூடக்கூடாது என்று உத்தரவு பிறப்பிக்கக்கூடிய அதி காரங்களைப் பெறுவதற்கு மத்திய சர்க்காரிடம் இது சம்பந்தமாகச் சிபார்சு செய்யுமா ? ''

THE HON. SRI M. BHAKTAVATSALAM :—" அப்படிப்பட்ட தூதுகோஷ்டி எப்பொழுது வந்தார்கள் என்று எனக்குத் தெரியவில்லை. ஆனால் தொழிற்சாலைகளை மூடக்கூடாது என்று உத்தரவு போடுவதற்கும் இடம் இல்லாமல் இல்லை, அரசாங்கம் அதைச் செய்யாமலும் இல்லை. சில சந்தர்ப்பங்களில் தொழிற்சாலைகள் மூடப்படுவது தவிர்க்கமுடியாது என்றுதான் நான் சொல்லி இருக்கிறேன்.''

Construction of Coleroon bridge in Sirkali taluk.

* 943 *Q.*—SRI C. MUTHIAH PILLAI : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) the original estimated amount for the construction of Coleroon bridge, Sirkali taluk;

(*b*) the revised estimate and the cost of the work now;

(*c*) the stage at which the work stands and the probable time when the construction of the bridge will be completed; and

(*d*) whether there was any change in the selection of contractors and if so, why?

THE HON. RAJA SRI SHANMUGA RAJESWARA SETHU-PATHI :—" (*a*) Rs. 28·50 lakhs as sanctioned.

" (*b*) Proposals for the revised estimate have not been received from the Chief Engineer.

" (*c*) The substructure of the bridge is almost complete and the work on superstructure is in progress. The bridge is expected to be completed by the end of 1955.

" (*d*) No.''

SRI C. MUTHIAH PILLAI :—" வேலை ஆரம்பித்து மூன்று வருஷங்கள் ஆகியும் இன்னும் அஸ்திவாரம் கூட கட்டி முடியவில்லை. அஸ்தி வாரக் கிணறு 60 அடி தோண்டப்பட்டது ஒன்றோடொன்று சேர்ந்துவிட்டால் ' **superstructure** ' புதிய முறையில் கட்டும்படியாக நேர்ந்துவிட்டது. அங்கு வந்திருந்த இரும்பு சாமான்கள் வேறு இடத்திற்குப் போகக் காரண மென்ன என்பதை மந்திரி அவர்களைத் தெரிவிக்குமாறு வேண்டுகிறேன்.

THE HON. RAJA SRI SHANMUGA RAJESWARA SETHU-PATHI :—" Sir, the work has been . . .''

SRI V. MADANAGOPAL :—" **On a point of order, Sir,** மந்திரி அவர்கள் பதில் கூறுகிறபோது ஆங்கிலத்தில் பேசினால் என்ன விஷயங்கள் சொல்லப்படுகின்றன என்பதை ஆங்கிலம் புரியாத அங்கத்தினர்கள் தெரிந்துகொள்வதற்கு முடியவில்லை. இதனால் அங்கத் தினர்கள் சட்டசபை நடவடிக்கைகளில் பயனுள்ள வகையில் பங்கெடுத்துக் கொள்ளமுடியவில்லை. ஆகவே, அங்கத்தினர்களுடைய உரிமை பறிக்கப் படுகிறது. நேற்றையதினம் பார்லிமெண்டில் பண்டித ஜவஹர்லால் நேரு அவர்களே இந்தியிலும், ஆங்கிலத்திலும் பதில் கூறியிருக்கிறார். அதே மாதிரியாக, கேள்விகளுக்கு ஆங்கிலத்தில் பதில்கள் தயாரிக்கப்பட்டிருப்